<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 557/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 26.09.2024**

| | |
|---|---|
| **Name : முனியப்பன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தற்போது பக்கநாடு கிராமத்தில் குடியிருந்து ஜலகண்டாபுரம் 7293 டாஸ்மார்க் மதுபான கடையில் மேற்பார்வையளாராக வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

2) நான் ஜலகண்டாபுரத்தில் உள்ள 7293 என்ற மதுபான கடையில் எத்தனை வருடங்களாக பணிபுரிந்து வருகிறோன் என்றால் 15 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். நான் கூடுதல் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறோனா என்றால் ஆமாம். என்னுடைய கடையில் அருள், பச்சமுத்து இருவரும் சூப்பர்வைஸ்சர், விற்பனையாளராக பணி புரிந்து வருகின்றனர். இந்த வழக்கு நடைபெற்ற சமயம் பாராளுமன்ற தேர்தல் என்றால் சரிதான்.

3. ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி அருள் மற்றும் பச்சமுத்துவிற்கு தெரிந்தவர்கள் என்றால் தெரியாது. ஆஜர் எதிரிதான் 3 நாட்கள் விடுமுறை என்பதால் அந்த சமயத்தில் மது பாட்டியை விற்பனை செய்தால் அதிக லாபம் மொத்தமாக கேட்டதாக சொன்னார் என்றால் சரியல்ல. மதுபான மேலாளார் தேர்தல் நடத்தை விதி அமலில் இருந்ததால் ஒரு நபருக்கு 5 பாட்டிலுக்குமேல் கொடுக்ககூடாது என்றால் சொன்னார் என்றால் சரிதான்.

4. ஆஜர் எதிரி அவருக்கு தெரிந்தவர்கள் மூலம் ஜலகண்டாபுரம் கடையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமமாக மதுப்பாட்டில்களை வாங்கி சென்று அவருடைய வீட்டு பாத்ரூம்பில் மொத்தம் 1820 பாட்டில்களை பதுக்கி வைத்திருந்ததாக வழக்கு பதிவு செய்து மேற்படி பாட்டில்களை போலீசார் கைப்பற்றினார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது.

5. என்னுடைய கடையில் cc tv பொறுத்தியுள்ளோம் என்றால் ஆமாம். அது எப்போதும் இயக்கநிலையில் இருக்குமா என்றால் போலீசார் ஆய்வு செய்தபோது 01.04.2024 ம் தேதியில் இருந்து செயல்படவில்லை என்று தெரியவந்துள்ளது. அருள் மற்றும் பச்சமுத்து இருவரும் எதிரிக்கு உதவி செய்து அவர்கள் தான் ஆஜர் எதிரிக்கு மதுபாட்டில்களை கொடுத்துள்ளனர் என்றால் எதிரி அவர்களிடம் மதுபாட்டில் கேட்டபோது அவர் அவ்வாறு கொடுக்கமுடியாது என்று சொன்னதால் வெறுப்பின் காரணமாக அருள் மற்றும் பச்சமுத்து மீது பொய்யான ஒரு வாக்குமூலத்தை கொடுத்துவிட்டார்.

6. அருள் மற்றும் பச்சமுத்து என்னுடன் பணிபுரிவதால் அவர்களுக்காக பரிந்து அவர்களை காப்பாற்ற வேண்டியும் எதிரிக்கா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 557/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 26.09.2024**

| | |
|---|---|
| **Name : வெங்கடாசலம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டுர் ஆர்பத்திரி காலனியில் குடியிருந்து வருகிறேன். ஜலகண்டாபுரம் 7193 டாஸ்மார்க் மதுபான கடையில் கூடுதல் மேற்பார்வையளாராக வேலை செய்கிறேன். இந்த சம்பவம் நடைபெறுவதற்கு 25 நாட்கள் முன்பாக தான் மேற்படி கடையில் நான் பணியில் சேர்ந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் ஜலகண்டாபுரத்தில் உள்ள 7193 என்ற மதுபான கடையில் எத்தனை வருடங்களாக பணிபுரிந்து வருகிறோன் என்றால் இந்த சம்பவம் நடைபெறுவதற்கு 25 நாட்கள் முன்பாக தான் மேற்படி கடையில் நான் பணியில் சேர்ந்தேன். நான் கூடுதல் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறோனா என்றால் ஆமாம். என்னுடைய கடையில் அருள், பச்சமுத்து இருவரும்

சூப்பர்வைஸ்சர், விற்பனையாளராக பணி புரிந்து வருகின்றனர். இந்த வழக்கு நடைபெற்ற சமயம் பாராளுமன்ற தேர்தல் என்றால் சரிதான்.

3. ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி அருள் மற்றும் பச்சமுத்துவிற்கு தெரிந்தவர்கள் என்றால் தெரியாது. ஆஜர் எதிரிதான் 3 நாட்கள் விடுமுறை என்பதால் அந்த சமயத்தில் மது பாட்டியை விற்பனை செய்தால் அதிக லாபம் மொத்தமாக கேட்டதாக சொன்னார் என்றால் சரியல்ல. மதுபான மேலாளார் தேர்தல் நடத்தை விதி அமலில் இருந்ததால் ஒரு நபருக்கு 5 பாட்டிலுக்குமேல் கொடுக்ககூடாது என்றால் சொன்னார் என்றால் சரிதான்.

4. ஆஜர் எதிரி அவருக்கு தெரிந்தவர்கள் மூலம் ஜலகண்டாபுரம் கடையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமமாக மதுப்பாட்டில்களை வாங்கி சென்று அவருடைய வீட்டு பாத்ரூம்பில் மொத்தம் 1820 பாட்டில்களை பதுக்கி வைத்திருந்ததாக வழக்கு பதிவு செய்து மேற்படி பாட்டில்களை போலீசார் கைப்பற்றினார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது.

5. என்னுடைய கடையில் cc tv பொறுத்தியுள்ளோம் என்றால் ஆமாம். அது எப்போதும் இயக்கநிலையில் இருக்குமா என்றால் போலீசார் ஆய்வு செய்தபோது 01.04.2024ம் தேதியில் இருந்து செயல்படவில்லை என்று தெரியவந்துள்ளது. அருள் மற்றும் பச்சமுத்து இருவரும் எதிரிக்கு உதவி செய்து அவர்கள் தான் ஆஜர் எதிரிக்கு மதுபாட்டில்களை கொடுத்துள்ளனர் என்றால் எதிரி அவர்களிடம் மதுபாட்டில் கேட்டபோது அவர் அவ்வாறு கொடுக்கமுடியாது என்று சொன்னதால் வெறுப்பின் காரணமாக அருள் மற்றும் பச்சமுத்து மீது பொய்யான ஒரு வாக்குமூலத்தை கொடுத்துவிட்டார்.

6. அருள் மற்றும் பச்சமுத்து என்னுடன் பணிபுரிவதால் அவர்களுக்காக பரிந்து அவர்களை காப்பாற்ற வேண்டியும் எதிரிக்கா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 557/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 26.09.2024**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மத்திய நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் மத்திய நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி 1 அய்யந்துரை மேட்டூர் மதுவிலக்கு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வந்தார். என்னிடம் காட்டப்படும் 18.04.2024ம் தேதிய எதிரி சிவா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 2வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும்.

2. என்னிடம் காட்டப்படும் 18.04.2024ம் தேதிய எதிரி சிவா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடம் இருந்து காலை 9.30 மணிக்கு பாண்டியன்வளவில் உள்ள எதிரி வீட்டில் வைத்து 1820 பாட்டிலில் Black peearl 452, Monitor 248, Top star 360, Simons 230, Express சுமார் 476, இவை அனைத்தும் 180 அளவுகொண்ட மதுபாட்டில்கள் ஆகும். மதுபாட்டில்கள் அனைத்தும் நான் மற்றும் அய்யந்துரை சாட்சியாக இருந்தபோது காவல் ஆய்வாளர் திருமதி.தனலட்சுமி அவர்கள் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள

2 வது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 2 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும்.

3. மேற்படி சம்பவம் கடந்த 18.04.2024 ம் தேதி காலை சுமார் 5 மணி அளவில் காவல் ஆய்வாளர் திருமதி.தனலட்சுமி அவர்களுக்கு கிடைத்த தகவலின்பேரில் மேற்படி சம்பவ இடத்திற்கு செல்ல என்னை அழைத்தார்கள். அதன்பேரில் நான் காலை 7 மணி அளவில் மேட்டுர் மதுவிலக்கு அமல்பிரிவிற்கு வந்தேன். அங்கு ஆஜரில் இருந்த காவல் ஆய்வாளர் திருமதி. தனலட்சுமி தலைமை காவலர் 388 அய்யந்துரை ஆகியோருடன் காவல் வாகனத்தில் ஜலகண்டாபுரம் காவல் துறை எல்லைக்குட்பட்ட பண்டியன்வளவு என்ற இடத்திற்கு சென்றபோது எதிரியின் வீட்டு அருகில் இருந்த ஒருவர் எங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார் .

4. அதன் பிறகு அந்தவீட்டிற்கு உள் சென்று பார்த்தபோது ராஜந்திரன் மகன் சிவா இருந்தார். அவருடைய வீட்டிற்குள் இருந்த பாத்ரூம்பில் தேடிபார்த்தபோது 5 சாக்கு பைகளில் 1820 மது பாட்டில்கள் இருந்தது. எதிரியை காவல் படுத்தி எங்கள் முன்னிலையில் மதுப்பாட்டில்களை கைப்பற்றி எதிரியுடம் ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் பெற்றார்கள். அப்போது எதிரி நாடாளுமன்ற தேர்தல் சமயத்தில் 3 நாட்கள் அரசு மதுபான கடைக்கு விடுமுறை என்பதால் அதிக லாபம் பெறும் நோக்கத்தில் விடுமுறை நாட்களில் மதுபாட்டில்களை விற்பனை செய்தால் அதிகம் லாபம் கிடைக்கும் எண்ணத்தில் சட்டவிரோதமாக ஜலகண்டாபுரம் அரசு மதுபான கடையில் சிறுகசிறுக வாங்கி சேமித்து வைத்திருந்ததாக வாக்குமூலம் அளித்தார். அதன் பின்னர் வழக்கு சொத்துக்களை கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை மற்றும் எதிரியை மேட்டுர் மதுவிலக்கு பிரிவிற்கு அழைத்துவந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

5. நான் 18.04.2024 ம் தேதி எத்தனை மணிக்கு PEW காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றால் காலை 7 மணிக்கு வந்தேன். நான் வரும்போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் திருமதி.தனலட்சுமி மற்றும் தலைமை காவலர் அய்யந்துறை இருவரும் இருந்தார்கள். மேலும் சோமசுந்தரம்

என்ற வாகன ஓட்டுனரும் இருந்தார். நாங்கள் 4 நபர்களும் எத்தனை மணிக்கு காவல் நிலைத்தில் இருந்து கிளம்பினோம் என்றால் சுமார் 7.15 மணி அளவில் கிளம்பினோம். என்ன வாகனத்தில் கிளம்பினோம் என்றால் காவல் வாகனம் பொலிரோ வாகனத்தில் சென்றோம். நான் காவல் நிலையத்திற்கு சென்ற பின்பு ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்தது என்றால் நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பாகவே தகவல் வந்துள்ளது.

6. நாங்கள் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சொன்றோம் என்றால் காலை 8 மணிக்கு சொன்றோம். போலீஸ் வாகனத்தை சம்பவ இடத்தில் நிறுத்தினோமா அல்லது தள்ளி நிறுத்தினோமா என்றால் எதிரியின் வீட்டிற்கு பின்புறமாக நிறுத்தினோம். யார் யார் எதிரி வீட்டிற்க்கு சென்றோம் என்றால் ஓட்டுனர் தவிர நாங்கள் 3 பேரும் சம்பவ இடம் சொன்றோம். எங்களை பார்த்த உடன் ஒருநபர் எதிரியின் வீட்டு அருகில் இருந்து ஓடிவிட்டதாக முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் குறிப்பாக எங்கிருந்து ஓடினார் என்றால் எதிரியின் வீட்டிற்கு முன்புறம் இருந்து ஓடினார்.

7. எதிரியின் பாத்ரூம் எங்கிருந்தது என்றால் எதிரியின் வீட்டிற்குள் இருந்தது. எதிரியின் வீட்டிற்குள் சென்று நேரடியாக பாத்ரூம் மட்டும் சென்று சோதனை செய்தோமா என்றால் வீட்டில் ஒரு Hall மற்றும் பாத்ரூம் மட்டும் இருந்தது. Hall யில் பரிசோதனை செய்துவிட்டு உபயோகத்தில் இல்லாத பாத்ரூமிற்க்கு சோதனை செய்தோம். யார் முதலில் பாத்ரூம் சென்று சோதனை செய்தோம் என்றால் நாங்கள் 3 பேரும் ஒருசமயத்தில் சோதனை செய்ததோம்.

8. பாத்ரூமில் இருந்து 5 மூட்டை சாக்கு பைகள் எந்தவிதமான சாக்கு பை என்றால் 5 ம் வெள்ளை நிற உரசாக்குமூட்டை ஆகும். அதில் என்ன பெயர் எழுதியுள்ளது என்றால் அதில் பெயர்கள் எதுவும் இல்லாமல் வெறும் வெள்ளை சாக்கு மூட்டை ஆகும். பெயர் மங்கலாக இருந்ததால் படிக்க இயலவில்லை. அந்த 5 மூட்டைகளையும் எங்கு வைத்து பரிசோதனை செய்தோம் என்றால் வீட்டின் Hall ல் வைத்து பரிசோதனை செய்தோம்.

9. பரிசோதனை செய்ய எவ்வளவு நேரம் எடுத்து கொண்டு இருப்பீர்கள் என்றால்

சுமார் 45 நிமிடம் இருக்கும். அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நாங்கள் 3 நபர்கள் மற்றும் எதிரி மொத்தம் 4 நபர்கள் இருந்தோம். கைப்பற்றுதல் மகஜரை ஆய்வாளர் எங்கு வைத்து தயார் செய்தார் என்றால் சம்பவ இடமான வீட்டு Hall ல் வைத்து தயார் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த பிறகு ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்யப்பட்டது என்றால் சரியாக நினைவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால்சம்பவ இடமான எதிரி வீட்டு Hall ல் இருந்து தயார் செய்யப்பட்டது.

10. கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து பிறகு ஒப்புதல் வாக்குமூலம் எவ்வளவு நேரம் கழித்து தயார் செய்யப்பட்டது என்றால் தொடச்சியாக நடந்தது. ஒப்புதல் வாக்குமூலத் தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆனாது என்றால் சுமார் 30 முதல் 40 நிமிடம் ஆனது. ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்த பின்பு அங்கு வைத்தே எதிரியிடம் கையொப்பம் பெறப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் காவல் ஆய்வாளர்தான் எழுதினார். கைப்பற்றுதல் மகஜரை யார் எழுதினார் என்றால் காவல் ஆய்வாளர் தான் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகிய இரண்டும் காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பட எழுதியது என்றால் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது, கைப்பற்றுதல் மகஜர் கையால் எழுதப்பட்டது.

11. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் காவல் ஆய்வாளர் அவர்களால் தட்டச்சு செய்யப்பட்டது. எங்கு சென்று அதை Printout எடுத்து வந்தார்கள் என்றால் அந்த சமயத்தில் நான் பாட்டில் அடிக்கி கொண்டிருந்ததால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஆய்வாளர் எவ்வளவு நேரம் கழித்து வெளியே சென்று வந்தார் என்றால் நான் 10 நிமிடம் கழித்து வெளியே வந்து பார்த்தபோது ஆய்வாளர் இருந்தார்.

12. 5 சாக்கு பைகள் என்ன ஆனது என்றால் காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தபிறகு சாக்கு பையை என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரியை ஆய்வாளர் எத்தனை மணிக்கு கைது செய்தார் என்றால் சுமார் 8.30 மணி முதல் 9 மணி வரை இருக்கும். எதிரியை கைது செய்ய உடன் காவல்

நிலைத்திற்கோ, உயர் அதிகாரிகளுக்கோ தகவல் கொடுத்தாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரியை கைது செய்தபோது ஜலகண்டாபுரம் காவல் நிலைய போலீசார் யாராவது உடன் இருந்தார்கள் என்றால் இல்லை.

13. எதிரியை கைது செய்த சமயம் தேர்தல் சமயம் என்றால் சரிதான். புகைப்பட கலைஞனரை அந்த சமயத்தில் அழைத்து சென்றேனா என்றால் இல்லை. ஆய்வாளர் எங்கு வைத்து எந்த தேதியில் விசாரித்தார் என்றால் மதுவிலக்கு பிரிவில் வைத்து விசாரித்தார் தேதி தற்போது நினைவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

14. என்னுடைய போலீஸ் விசாரணையில் ஜலகண்டாபுரம் அரசு மதுபான கடையில் 7193 கடையின் சூப்பர் வைஸ்சர் அருள் மற்றும் விற்பனையாளர் பச்சமுத்து ஆகியோர்களிடம் எனக்கு நல்ல பழக்கம் இருந்ததால் அவர்களிடம் பேசி கொஞ்சம் கொஞ்சமாக மதுபான பாட்டில்களை எதிரி சிவா வாங்கி வைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னதன் பேரில் சொன்னேன்.

15. இன்று நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் ஏன் மேற்சொன்ன தகவலை சொல்லவில்லை என்றால் காவல் ஆய்வாளர் தனலட்சுமி அவர்கள் எதிரியை மீண்டும் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றபிறகு எதிரியானவர் அருள் மற்றும் பச்சமுத்து ஆகியோர்கள் மீது இருந்த காழ்புணர்ச்சியில் அவ்வாறு சொன்னதாகவும் மேற்படி நபர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என எதிரி வாக்குமூலம் அளித்ததன்பேரில் நான் இப்போது முதல் விசாரணையில் சொல்கிறேன்.

16. எதிரியை எந்த தேதியில் ஆய்வாளர் எங்கு மேற்சொன்னவாறு விசாரித்தார் என்றால் தேதி நினைவில்லை. இடம், தேதி நினைவில்லை. புலன் விசாரணை அதிகாரி மூலம் தெரிந்து கொண்டேன். எவ்வளவு நாட்கள் கழித்து புலன் விசாரணை அதிகாரி என்னிடம் சொன்னார் என்றால் எதிரியை விசாரித்த அன்றே என்னிடம் சொன்னார்கள்.

17. என்னை தேர்தல் சமயத்தில் சிறப்பு பணியாக பணியமர்த்தப்பட்டேன் என்றால் இல்லை எனது பணி சட்ட விரோத மதுபான விற்பனை மற்றும் போதை பொருட்கள் விற்பனையை கண்காணிப்பதே எனது பணி ஆகும். எதிரியின் வீட்டிற்கு வீட்டு அருகே சென்ற போது ஒரு நபர் எங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அவரை துரத்திபிடிக்க முயற்சி செய்யவில்லையா என்றால் நாங்கள் மதுவிலக்கு வேட்டையாக சென்ற மூவரும் எதிரியின் வீட்டிற்குள் சென்றுவிட்டோம்.

18. நான் சொல்வது போல் சொல்லும் இடத்தில் எதிரியை ஆய்வாளர்கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி வீட்டிற்குள் இருந்த பாத்ரூம்பில் இருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றபட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரி வீட்டிற்கு வெளியே தான் பாத்ரூம் உள்ளது என்றும், வழக்கிற்காக வீட்டிற்குள் பாத்ரூம் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

19. தேர்தல் சமயத்தில் வேறொங்கோ கிடைத்த மதுப்பாட்டிகளை அரசுக்கு கணக்கு காட்டுவதற்காக ஜலகண்டாபுரம் பேருந்து நிலையம் அருகே நின்று இருந்த எதிரி மீது தவறாக ஒரு வழக்கு பதிவு செய்து அதற்கு நான் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அனைத்து மதுப்பாட்டில்களையும் கைப்பற்றிய பிறகு எவ்வளவு நேரம் கழித்து காவல் நிலையம் வந்தோம் என்றால் சுமார் 10.30 முதல் 10.45 மணிக்கு வந்தோம்.

20. ஆய்வாளர் போட்டுவைத்த தவறான வழக்கிற்க்கு ஆதரவாக நான் தவறுதலகா நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சூப்பர்வைஸ்ரர் அருள் மற்றும் விற்பனையாளர் பச்சமுத்து ஆகியோர் அரசு ஊழியர் என்பதால் அவர்களை காப்பற்றும் நோக்கில் நீதிமன்ற முதல் விசாரணையில் அவர்கள் பெயரை நான் சொல்லாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**